**இலங்கை போக்குவரத்து சபை - 2018**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

இலங்கை போக்குவரத்து சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகழ்விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இவ்வறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிட்டிருந்த விடயங்களின் படி சபையின் 2018 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்று தெரிவிக்கவில்லை.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ் அறிக்கையில் 1.5 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாகக் காணப்படுவதுடன், முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பரிசோதனை செய்யும் பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்ல வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபை தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதாக என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக

அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன், அவ்வெளிப்படுத்துதல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அதன் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மேலதிக பற்று வசதிகள் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 325,100,000 இற்கான நிலையான வைப்புக்கள், பிணைப் பொறுப்புக்கள் என சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 07 இல் (SLFRS 7) இன் பிரிவுகள் 14 ஏ மற்றும் பீ பிரகாரம் அது தொடர்பாக வெளிப்படுத்தல்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | இந்த மேலதிகப் பற்று வசதி ஒன்றாக மாத்திரம் காணப்பட்டதுடன், SLFRS 7 இன் பிரிவுகள் 14 (a) மற்றும் (b) இன் படி ஐந்தொகை திகதியில் உள்ளவாறு பொறுப்பு ஒன்று அல்லது நிகழக்கூடிய பொறுப்பு ஒன்றாக ஏற்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட நியமத்தின் படி கணக்கீட்டு வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் படி 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 270,654,512 தொகைக்கான காணிகள் மற்றும் கட்டிடங்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் நியமத்தின் 58 ஆம் பந்தியின் படி அவை வேறாக கணக்கீடு செய்திருக்கவில்லை. | நிலையான சொத்துக்களை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்தல் LKAS 16 இன் படி பந்தி இலக்கம் 07 முதல் 39 வரை குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் படி காணிகள் மற்றும் கட்டிடங்கள் வெவ்வேறாக இனங்காண வேண்டும் என குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | காணிகள் மற்றும் கட்டிடங்கள் வெவ்வோறாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியதுடன் நியமத்தின் படி மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கண் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உடஹமுள்ள டிப்போவினால் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 49,796,553 தொகையான ஊழியர் சேமலாபம், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் பணிக்கொடை மிகை விதிப்புத் தொகை மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்றென காட்டப்பட்டிருந்தமையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள இலாபம் அப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட வழு ஏற்பட்டிருந்தது. | குறிப்பிட்ட வழுவை சரி செய்து சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) சபையின் விளையாட்டுத் திடல் வெளி நபர்களுக்கு மற்றும் நிறுவனங்களுக்கு விளையாட்டு அலுவல்களுக்காக வழங்கப்படுவதன் மூலம் கிடைத்திருந்த ரூபா 4,470,901 இற்கான தொகை சபையின் வருமானத்திற்கு செலவு வைக்காமல் விளையாட்டுக் கழக கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் சபையின் வருமானம் அத் தொகையினால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தலைவரினால் வழங்கியிருந்த அங்கீகாரத்தின் மீது இந்த வருமானம் விளையாட்டுக் கட்டுப்பாட்டு சபையின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டது. | சபையின் வருமானம் வெளி கணக்குகளுக்கு செலவு வைக்காமல் நிறுவனத்தின் வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2016 ஆம் ஆண்டின் போது அரசிற்கு உரித்தாக்கியிருந்த காணி ஒன்று தொடர்பாக நட்டஈடாக கிடைத்திருந்த ரூபா 30,371,875 இற்கான தொகை ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைக்காமல் ஏனைய வருமானங்கள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. மேலும் இந்தக் காணியின் கிரயம் காணி மற்றும் கட்டிடக் கணக்கிற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுத்திருக்காததுடன், காணிக்காக கிடைத்திருந்த நட்டஈட்டுத் தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | இந்தக் காணி அரச அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்டமையால் கிடைத்திருந்த நட்டஈட்டுத் தொகை ஒன்று மாத்திரமாக இருந்ததுடன் அதற்காக செலவு ஏதும் இபோசவினால் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக இந்தத் தொகை ஏனைய வருமானம் ஒன்றென இனங்காணப்பட்டது. | குறிப்பிட்ட தொகை சரியாக கணக்குகளில் காட்டப்பட வேண்டியதுடன், சரியான முறையில் காசுப் பாய்ச்சலிலும் காட்டப்பட வேண்டும். |
| (ஈ) | சபையின் குறுகிய கால முதலீடுகள் (REPO) ரூபா 350,000,000 தொகை 2018 ஆம் ஆண்டின் இறுதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன், அதற்காக பெற வேண்டிய ரூபா 2,549,442 இற்கான வட்டி வருமானம் மீளாய்வாண்டிற்காக இனங்கண்டு இருக்காததுடன் அக் காரணத்தினால் சபையின் வருமானம் அத் தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட கணக்கீட்டு வழு ஏற்பட்டிருந்தது. | குறிப்பிட்ட கணக்கீட்டு வழுவை சரி செய்ய வேண்டும். |
| (உ) | 2019 ஜனவரி 01 கொள்வனவு செய்திருந்த ரூபா 666,000 தொகை பெறுமதியான 6,600 லீற்றர் எரிபொருள் மீளாய்வாண்டு இறுதி இருப்பு பெறுமதியில் உட்படுத்தி இருந்தமையால் இலாபம் அதே தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | குறிப்பீட்டு கணக்கீட்டு வழு ஏற்பட்டிருந்தது. | குறிப்பிட்ட கணக்கீட்டு வழுவை சரி செய்ய வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்கான கொள்வனவுகள் தொடர்பாக வர்த்தக கொமிஷன் மற்றும் கழிவுகள் ரூபா 165,655,405 தொகையாக இருந்ததுடன் அந்தப் பெறுமதியை மீண்டும் வருமானக் கூற்றில் மற்றும் கொள்வனவுப் பெறுமதியுள் உட்படுத்தியிருந்தமையால் கொள்வனவுப் பெறுமதி மற்றும் கொமிஷன் மற்றும் கழிவு வருமானம் அப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | டிப்போகளினால் கொள்வனவு செய்யப்படும் டீசல்களுக்காக வழங்கப்படும் வியாபாரக் கழிவு இதில் அடங்கியுள்ளது. | வியாபாரக் கழிவு கணக்கீடு செய்யப்படக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| (எ) | மத்திய பஸ் நிலைய அலுவலகத்தின் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 22,419,960 தொகை எனக் காட்டப்பட்டிருந்த போதிலும், நிலையான வைப்பு சான்றிதழ்களின் படி அந்த மீதி உண்மையாக ரூபா 22,855,062 தொகையாக இருந்தது. வித்தியாசத்திற்கான காரணம் நிலையான வைப்புக்களின் மூலம் கிடைத்திருந்த வட்டி வருமானம் ஆகிய ரூபா 435,102 தொகையினை கணக்கீடு செய்திருக்காமை என அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக அதே தொகையினால் வட்டி வருமானம் குறைவாக மற்றும் நிலையான வைப்புக்கள் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிலையான வைப்புக்களின் வட்டியினை கவனத்தில் எடுக்காமல் கணக்கீடு செய்யப்பட்டமையால் இந்த தவறு ஏற்பட்டிருந்தது. | நிலையான வைப்பு வட்டி சரியான முறையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| | விடயம் | நிதிக் கூற்றுக் களின் படி பெறுமதி | நேரொத்த அறிக்கை களின் படி பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள வியாபார கடன் கொடுத்தோர் மீதிகள் மற்றும் டிப்போகளில் இருந்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடன்கொடுத்தோர்கள் அட்டவணைகளை பரிசோதனை செய்த போது ரூபா 3,434,376 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | 232,541,414 | 231,051,668 | 3,434,376 | அட்டவணைகள் தயாரிக்கும் போது குறிப்பிட்ட வழு ஏற்பட்டிருந்தது. | குறிப்பிட்ட இணக்கங்களை சரியாக மேற்கொண்டு சரியான பெறுமதியை கணக்குகளுக்கு எடுக்க வேண்டும். |
| (ஆ) | தெரனியகல டிப்போவில் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கி மேலதிகப் பற்று ரூபா 2,127,679 தொகை எனினும், சபையின் நிதிக் கூற்றுக்களில் | 5,778,641 | 2,127,679 | 3,650,962 | ரூபா 2,127,670 என காட்டப்பட்டுள்ளது தெரனியகல டிப்போவின் வங்கிக் கூற்றின் படியான மீதியாகும். ரூபா 5,778,641 பெறுமதி | குறிப்பிட்ட இணக்கங்களை சரியாக மேற்கொண்டு சரியான பெறுமதியை கணக்குகளுக்கு எடுக்க வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அந்த மேலதிகப் பற்று ரூபா 5,778,641 தொகை என காட்டப்பட்டிருந்தது. அதன் படி ரூபா 3,650,962 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | | | | காசேட்டின் படி மீதியாக காணப்பட்டதுடன், அதனை நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டது. இந்த வித்தியாசத்திற்கான காரணம் வங்கி இணக்கக் கூற்றின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. | |
| (இ) | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு எம்பிலிபிட்டிய டிப்போவின் வங்கி மீதியை உறுதிப்படுத்தும் கடிதத்தின் படி 02 நிலையான வைப்புக்கள் அவதானிக்கப்பட்டதுடன் அவை முறையே ரூபா 16,563,317 தொகை மற்றும் ரூபா 1,581,212 தொகைகள் ஆகும். எனினும் நிலுவை சமன்பாட்டில் ரூபா 16,400,000 காட்டப்பட்டிருந்ததுடன், நித நிலைமை கூற்றின் படி ரூபா 1,744,529 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | 16,400,000 | 18,144,529 | 1,744,529 | எம்பிலிபிடிய டிப்போவின் நிலையான வைப்புக்கள் முதிர்வடையும் போது காலப் பகுதிக்கான வட்டி உடன் மீண்டும் முதலீடு செய்யப்பட்டிருந்தது. அதனை கணக்கீடு செய்திருக்காமையால் வட்டி பெறுமதியும் கூட்டப்பட்டு மீண்டும் நிலையான வைப்புக்களில் சேகரமாகின்றது. அது கணக்கீடு செய்யப்படாமையால் இந்தத் தவறு ஏற்பட்டிருந்தது. | குறிப்பிட்ட முதலீடுகள் மற்றும் அதற்குரிய வட்டி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்வதற்காக மற்றும் சலுகைசார் போக்குவரத்துச் சேவைகள் நடாத்துவதற்காக திறைசேரியில் இருந்து கிடைத்திருந்த தொகையில் ரூபா 4,892,941,638 இற்கான தொகை ஒன்று சபை அலுவலர்களின், சாரதிகள் மற்றும் நடாத்துனர்களின் சம்பளத்திற்காக | பதில் வழங்கியிருக்கவில்லை. | திறைசேரியினால் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களுக்காக மாத்திரம் உரிய பணம் செலவிடப்பட வேண்டும். |

செலவிடப்பட்டிருந்ததுடன் அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

### 1.5.5 தொழிற்படாத கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் மற்றும் நடைமுறையல்லாத பொறுப்புக்களின் கீழ் தொழிற்படாத கணக்குகள் என முறையே ரூபா 1,290,582,782 தொகை மற்றும் ரூபா 18,526,264,583 தொகை தீர்க்கப்படாமல் முன்கொண்டு வரப்பட்டு இருந்ததுடன் இவற்றின் சரியான தன்மையை அல்லது உளமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முடியாமல் இருந்தது. | 2017 ஆம் ஆண்டின் தொழிற்படாத கணக்கில் ரூபா 9,935,459,128 இற்கான வரவு மீதி ஒன்றும், ரூபா 26,054,954,882.06 இற்கான செலவு மீதி ஒன்றும் காணப்பட்டது. அந்த மீதிகளை தீர்ப்பதற்காக 03 பேர்களை கொண்ட குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டது. அந்த குழுவின் மூலம் ரூபா 8,644,676,346.73 இற்கான வரவு மீதியொன்றும், ரூபா 7,528,690,099 இற்கான செலவு மீதியொன்றும் தீர்க்கப்பட்டது. அதன் பின்னர் அந்தக் குழுவில் அங்கத்துவம் வகித்த திறைசேரியின் பிரதிநிதி அக் குழுவில் இருந்து விலகியதுடன், அதற்காக வேறு அங்கத்தவர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் தற்போது நாட்டில் நிலவுகின்ற தொற்றுநோய் நிலைமை காரணமாக புதிய குழுவிற்கு கூடுவதற்கான இதுவரை சந்தர்ப்பம் ஒன்று கிடைக்கவில்லை. | இந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தோகை | சமர்ப்பிக்கப் படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | . | | |
| பலவின கடன்பட்டோர் மீதி<br>நடத்துனர் நிலுவை மீதி<br>காசாளர் நிலுவை மீதி<br>வியாபாரக் கடன்கொடுத்தோர்<br>மூலதன ஒதுக்கங்கள் மற்றும் | 108,227,804<br>5,784,775<br>34,391,996<br>3,444,436,890<br>5,301,844,512 | அட்டவணைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு | இது தொடர்பாக விபரங்கள் மற்றும் அட்டவணைகள் பிரதேச அலுவலகங்கள், டிப்போக்கள் மற்றும் | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளுக்கான விபரங்கள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| ஏனைய ஒதுக்கங்கள் உரிமை மூலதனம் | 350,000,000 | தலைமை அலுவலகம் என வெவ்வேறாக உங்கள் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. | அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| திறைசேரியின் பங்கு மூலதனம் | 3,944,890,550 | | |
| நிலையான வைப்புக்கள் | 700,920,663 | | |
| அரசாங்க மானியங்கள் | 2,981,392,313 | | |
| தொழிற்படாத கணக்குகள் (வரவு மீதி) | 1,290,782,782 | | |
| நிலையான சொத்துக்கள் | 29,391,137,146 | | |
| தொழிற்படாத கணக்குகள் (செலவு மீதி) | 18,526,264,783 | | |
| உள்நாட்டு கொள்வனவு முற்பணங்கள் | 203,913,674 | | |
| திருப்பி செலுத்த வேண்டிய ஊழியர் வைப்புக்கள் | 156,966,291 | | |
| பெற வேண்டிய நீதிமன்ற வைப்புக்கள் | 7,994,271 | | |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத உள்நாட்டுக் கொள்வனவு முற்பண மீதி ரூபா 1,511,690,256 தொகையாக இருந்தது. இந்த கொள்வனவு முற்பணத்தில் 2011 ஆண்டு முதல் தீர்க்கப்படாத முற்பண மீதிகள் காணப்படுவதுடன், அவற்றில் ரூபா 1,135,202,561 இற்கான தொகை ஒன்று 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த முற்பணங்கள் என அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக செலவுகள் மற்றும் சொத்துக்கள் மீதிகள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | இது வரை தீர்க்கப்படாமல் காணப்பட்ட முற்பணங்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையை அறிவுறுத்தியுள்ளதுடன், இந்த முற்பணங்கள் 2013, 2014 மற்றும் 2015 ஆண்டுகள் தொடர்பானவையாகும். | குறிப்பிட்ட முற்பணங்கள் வழங்குதல் மற்றும் முற்பணங்கள் தீர்த்தல் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்படுதல் அத்தியசவியமாகும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் | சபையின் பதவியணிக்காக அமைப்பு வரைபடம் ஒன்று ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்று மற்றும் பதவி உயர்வு | பதில் வழங்கியிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் படி குறிப்பிட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவியுயர்வு |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கை – பிரிவு 9.2 | நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றிருக்கவில்லை. | | நடைமுறை அங்கீகரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப் பிரமாணம் 110 | சபையினால் சேதங்கள் தொடர்பாக பதிவழிப்பதற்காக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | சபையின் கிரியையின் பிரகாரம் விபத்து நட்டங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களுக்கான நட்டங்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணப்பட்டு வருகின்றது. நட்டம் ஏதும் காணப்படின் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணங்களின் படி சேதங்கள் பதிவேடு ஒன்று பேணிச் செல்லப்பட வேண்டும். |
| | (ii) நிதிப் பிரமாணம் 381 | கடமை வங்கிக் கணக்குகள் ஆரம்பிப்பதற்காக திறைசேரிக்கு விண்ணப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் சபையினால் 18 வங்கி நடைமுறை கணக்குகள் செயற்படுத்தப்பட்டிருந்தது. | இந்த வங்கிக் கணக்குகள் முன்னர் இருந்து காணப்பட்டு வருவதுடன் தற்போது தேவையற்ற அனைத்து வங்கிக் கணக்குகளையும் செயலிழக்கச் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வங்கிக் கணக்குகள் ஆரம்பித்தலில் பேணிச் செல்லலில் முறையான நடைமுறை ஒன்று கடைபிடிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,285,969,924 இற்கான இலாபம் ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,618,237,714 தொகை ஆகும். அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 332,267,790 இற்கான வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 171,491,777 அதிகரித்திருத்தல் காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவு விடயங்களில் போக்குப் பகுப்பாய்வு

- மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக சபையின் பிரதான வருமானத்துள் அடங்கியுள்ள கெமிசெரிய மற்றும் பத்திரிகை போக்குவரத்து வருமானம் முறையே 100 சதவீதத்தினாலும் மற்றும் 76 சதவீதத்தினாலும் குறைந்திருந்தது. மேலும்

எரிபொருள் நிரப்பு நிலையத்தின் வருமானம் 93 சதவீதத்தினால் மற்றும் சுற்றுலா விடுதி வருமானம் சுமார் 48 சதவீத்தினாலும் குறைந்திருந்தது.

- சபையின் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கான மேலதிக நேர கொடுப்பனவுச் செலவு 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டில் 18 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் பஸ் வண்டிகளுக்கான எரிபொருள் செலவு 12 சதவீதத்தினாலும் ஏனைய விஷேட கொடுப்பனவுகள் 31 சதவீதத்தினாலும் மற்றும் திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் 57 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

- மீளாய்வாண்டின் நடைமுறை விகிதாசாரம் 1.66 தொகையாக இருந்ததுடன், அது முன்னைய ஆண்டின் விகிதாசாரம் ஆகிய 1.76 இற்கு ஒப்பாக குறைந்த பெறுமதி ஒன்று காணப்பட்டமை ஒரு சிறந்த நிலைமை என அவதானிக்கப்பட்டது.

- மீளாய்வாண்டின் இலாப விகிதாசாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 1.25 சதவீதத்தினால் குறைந்திருந்தது. இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக செயற்பாட்டுச் செலவு ரூபா 2,001,516,678 அதிகரித்திருத்தல் காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் பணிக்கொடை என்பவற்றிற்கு உரிய முறையில் பணம் செலுத்தாமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 183,725,038 இற்கான தொகை ஒன்று மிகை விதிப்பாக செலவு மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது. | இபோசவில் காணப்பட்ட சீரற்ற நிதி நிலைமையின் காரணத்தினால் 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்காக குறிப்பிட்ட தினத்துக்கு முன்னர் பணிக்கொடை செலுத்துவதற்கு முடியாமல் போனதுடன் அதன் மீது செலுத்த நேரிட்டிருந்த மிகை விதிப்புச் தொகை இங்கு காட்டப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட சேமலாபம் மற்றும் ஏனைய தொகைகளை உரிய நேரத்தில் செலுத்தி மிகை விதிப்பிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையின் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு காசும் காசுக்கு சமமானவைகளின் கூட்டுத்தொகை ரூபா 3,968,913,250 தொகையாக இருக்கும் போது, பல்வேறு சந்தர்ப்பங்களில் வங்கி மேலதிகப்பற்று பெற்றிருந்ததுடன் வருட இறுதியில் ரூபா 131,747,317 இற்கான மேலதிகப் பற்றொன்று பேணப்பட்டு வந்திருந்தது. இந்த மேலதிகப் பற்று வசதிகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 9,115,565 தொகை மேலதிகப்பற்று வட்டி என செலுத்தப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டு வரை இபோச தீவிர பண நெருக்கடி நிலைமையில் காணப்பட்டமையால் அப்போது டிப்போக்களினால் வங்கி மேலதிப் பற்றுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | சபையின் செயற்படு மூலதனம் முகாமைத்துவம் உரிய முறையில் மேற்கொள்ளப்படுவதன் மூலம் மேலதிகப்பற்று வட்டி செலுத்துவதை குறைத்துக்கொள்ள வேண்டும். |

### 3.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் பிராந்திய அலுவலகங்கள், டிப்போக்கள், சாரதி பயிற்சி பாடசாலைகள் மற்றும் பிராந்திய வேலைத் தளங்கள் ஆகிய பல்வேறு இடங்களில் பேணப்பட்டு வருகின்ற நிறுவனங்களுக்கு உரிய காணிகள் தொடர்பான பதிவேடு ஒன்று மற்றும் அதனோடு தொடர்புடைய கோவைகள் பேணப்பட்டு வந்திருக்கவில்லை. மேலும் சபையின் டிப்போக்கள் மற்றும் பிராந்திய வேலைத் தளங்கள் அமைந்துள்ள 160 ஏக்கர் அளவான காணியின் உரிமையை தீர்த்திருக்காததுடன் மற்றும் பயன்படுத்தப்படும் மற்றும் பயன்படுத்தப்படாத காணிகளின் எல்லைகளை நிர்ணயித்து பாதுகாப்பு வேலிகள் போடப்பட்டு இருக்கவில்லை. | இபோசவினால் அனுபவித்து வரும் காணிகளின் எல்லை வேலிகள் தயாரிப்பதற்காக அந்த காணிகளின் நிறுவன தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு பாதுகாப்பு வேலிகள் நிர்மாணிப்பதற்காக இந்த காணிகளை அளவை செய்யும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதற்காக பாரிய செலவொன்று மேற்கொள்வதற்கு நேரிடுவதனால் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (காணி) அவர்களின் அறிவுரையின் பிரகாரம் தேவையான பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு அந்தப் பதிவேடுகள் அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட பின்னர் அவரின் தலைமைத்துவத்தின் கீழ் குறிப்பிட்ட பிரதேச செயலாளர்கள் அழைக்கப்பட்டு ஒரே தடவையில் இந்தக் காணிகளை அளவை செய்யும் உரிமை இபோசவிற்கு சாட்டப்பட்ட பின்னர் பாதுகாப்பு வேலிகள் போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணிகளின் உரிமை தொடர்பாக பதிவேடுகள் மற்றும் காணி உறுதிகள் போலவே அவற்றிற்காக பாதுகாப்பு வேலிகள் என்பன சரியான முறையில் தயாரித்துக் கொள்ளல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் 9 மாகணங்களில் 9 வாகன வாயு வெளியேற்று நிலையங்கள் நிர்மாணிப்பதற்காக அவற்றிற்கான உபகரண தொகுதிகள் 2018 ஏப்ரல் 26 திகதி மோட்டார் | 2018 ஆண்டில் முதல் காலாண்டில் நடைபெற்ற மீளாய்வு கூட்டத்தில் வழங்கப்பட்ட தீர்மானம் ஒன்றின் படி இந்த உபகரணத் | மூலதன செயற்திட்டம் ஆரம்பிக்கும் போது சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கை, கிரய பயன் அறிக்கை சுற்றாடல் |

போக்குவரத்து திணைக்களத்தின் வாகன வாயு வெளியேற்று நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் இருந்து ஒப்புக் கொண்டிருந்ததுடன் இந்த நிலையங்கள் நிர்மாண வேலைகள் சாத்தியக்கூறு ஆய்வு ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த வாயு வெளியேற்று நிலையங்களின் குருநாகல் மற்றும் மதவாச்சி ஆகிய நிலையங்களின் நிர்மாணிப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு திறக்கப்பட்டிருந்த போதிலும் சட்ட சிக்கல் ஒன்றின் காரணமாக மூடப்பட்டிருந்தது. இந்த நிலையங்களில் ரூபா 18.75 மில்லியன் பெறுமதியான இயந்திர உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டது எனவும், இந்த சொத்துக்களை பயன்படுத்துவதற்கு பொருத்தமான விதத்தில் குறிப்பிட்ட சிவில் நிர்மாண வேலைகளுக்காக ரூபா 22.48 மில்லியன் மதிப்பீட்டுத் தொகையில் ரூபா 89.84 மில்லியன் தொகையில் தொகை மாத்திரம் கணக்காய்வுத் திகதியாகிய 2019 செப்தெம்பர் 30 திகதி அளவில் செலவிடப்பட்டிருந்தது. மேலும் வாகனங்களின் வாயு வெளியேற்று இயந்திரம் பொருத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்குதல் மற்றும் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் தொடர்பாக தரவுகள் வாகனப் புகைப் பரிசோதனை நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டியதுடன், அதற்கான இணையத்தள வசதிகளுக்காக இலங்கை டெலிகொம் நிறுவனத்தில் இருந்து இணையதள வசதிகள் பெற்றுக் கொண்டு ரூபா 164,280 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியளவில் செயற்திட்டத்தின் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

தொகுதிகள் இபோசவிற்கு பெற்றுக்கொள்ள நேரிட்டிருந்தது. இந்த செயற்திட்ட பிரேரணை இபோச மூலம் செயற்படுத்த வேண்டிய செயற்திட்டம் ஒன்றென அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தமையால் தேவையான நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

பாதுகாப்பு அறிக்கை என்பவற்றை கவனத்தில் எடுத்தி அதன் படி செயற்திட்டங்கள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் பிரிவு 11 மற்றும் 2003 ஜூன் 02 திகதிய PED/12 அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.1 பிரகாரம் நியதிச் சட்ட சபைகளினால் வருடாந்தம் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு வருடாந்த அறிக்கை கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2 வருடங்கள் 3 மாதங்கள் 19 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2020 ஜூன் 19 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வருடாந்த அறிக்கைகள் இறுதியாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருந்தது 2017 ஆம் ஆண்டிற்கானதாகும். | பதில் வழங்கியிருக்கவில்லை. | வருடாந்த அறிக்கைகள் உரிய முறையில் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்த பின்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

### 4.3 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 ஜூன் 12 திகதி பீஈடீ 12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்கவில்லை. | கூட்டிணைந்த திட்டம் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.4 செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜூன் 02 திகதிய பீஈடீ 12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 5.1.2 இன் பிரகாரம் திட்டமிடப்பட்ட காலப்பகுதியுள் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நெருங்கக் கூடிய விதமாக முகாமைத்துவத்தின் பொறுப்பினை தெளிவாக இனங்கண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் சபையின் நிதி நிலைமையைக் கவனத்தில் எடுக்காமல் நெருங்க முடியாத இலக்குகள் மற்றும் நெருங்க முடியாத குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை உட்படுத்தி தயாரிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.5 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 14 திகதிய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் NP/5P/5dg/17 இலக்கங் கொண்ட சுற்றிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு நிலைபேறான அபிவிருத்தி திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | பதில் வழங்கியிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.6 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டிருந்ததுடன், அதன் பதவியணிக்குரிய பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் தரம் I உத்தியோகத்தர் ஒருவராக இருக்க வேண்டிய போதிலும் III தரத்தை | பதில் வழங்கியிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் சபையின் பிரதான பிரிவுகள் உள்ளடங்கக் கூடிய விதமாக தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். |

சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் காணப்பட்டதுடன் ஒட்டுமொத்த பதவியணி 90 ஆக இருந்தது. உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் இபோச தொடர்பாக தேவையான கவனம் செலுத்தப்பட வேண்டிய செயற்பாட்டுத் திறமையின்மைகள், எரிபொருள் நுகர்வு, பராமரிப்பு சேவைகள், விளைவற்ற இருப்புக்கள், பஸ் வண்டிகளின் சேவைகளின் வினைத்திறன்கள் மற்றும் பண்புசார் தன்மை என நிலையான சொத்துக்களின் உளமை மற்றும் பாதுகாப்பு ஆகிய துறைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**4.7 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜூன் 02 திகதி பீஈடீ 12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 பந்தியின் படி பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள் கூற்று, பாதிடப்பட்ட ஐந்தொகை, பாதிடப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க பாதிடப்பட்ட மூலதனச் செலவு அறிக்கை ஒன்று தயாரித்திருக்கவில்லை. | பதில் வழங்கியிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |

**4.8 சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| டிப்போ வளாகங்களில் காணப்படும் செயற்களங்களில் எண்ணெய் கழிவுப் பொருட்கள் இடுவதற்காக முறைப் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறை ஒன்று பயன்படுத்தப்பட வேண்டியிருந்ததுடன், 2008 ஜனவரி 25 திகதிய இலக்கம் 1533/16 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் மற்றும் 1980 இன் 47 ஆம் | அனைத்து டிப்போக்களுக்கும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளும் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொண்டிருக்காத 84 டிப்போக்கள் குறிப்பிட்ட அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் படி அதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதிப் பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், சபையின் 107 டிப்போக்களில் 09 டிப்போக்கள் தவிர ஏனைய டிப்போக்கள் அந்த சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொண்டிருக்கவில்லை.